# காலாவதியான COVID-19 பரிசோதனைக் கருவிகள் பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**உங்கள் காலாவதியான COVID-19 பரிசோதனைக் கருவிகளை தூக்கி எறிய வேண்டாம். பெட்டியில் குறிப்பிட்டுள்ள காலாவதித் தேதி முடிந்திருந்தாலும், உங்கள் COVID-19 பரிசோதனைக் கருவி நன்றாக உள்ளதா என்பதைத் தெரிந்துகொள்வதற்கான வழிமுறைகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.**

## காலாவதியான COVID-19 பரிசோதனைக் கருவியை நான் பயன்படுத்தலாமா?

ஆம். தரக்கட்டுப்பாடு சோதனையில் பரிசோதனைக் கருவிகள் தேர்ச்சி பெறும் பட்சத்தில், Washington State Department of Health (DOH, வாஷிங்டன் மாகாண சுகாதாரத் துறை) காலாவதியான பரிசோதனைக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கான அதிகாரப்பூர்வ ஒப்புதலை வெளியிட்டுள்ளது (ஆங்கிலத்தில்), இதைப் பற்றி நாங்கள் கீழே விளக்குகிறோம்.

கூடுதலாக, சில COVID-19 பரிசோதனைக் கருவிகள் U.S. Food and Drug Administration (FDA, அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம்)இன் மூலம் தேக்க ஆயுள் நீட்டிப்பைப் பெறுகின்றன, இது நீங்கள் பெட்டியில் பார்ப்பதற்கு மாறாக, அந்த பரிசோதனை கருவிகளுக்கான புதிய காலாவதி தேதிகளை வழங்குகிறது. எந்தெந்த பரிசோதனைக் கருவிகள் புதுப்பிக்கப்பட்ட காலாவதித் தேதியைக் கொண்டிருக்கின்றன என்பதை அறிய, FDA இன் நீட்டிக்கப்பட்ட தேக்க ஆயுளைக் கொண்ட பரிசோதனைக் கருவிகளின் பட்டியல் (ஆங்கிலம் மற்றும் ஸ்பானிஷ் மொழிகளில்) என்ற இணைப்பைக் காணலாம். DOHக்கு ஏற்ப தற்போது பழைய தேதியைக் கொண்டிருந்தாலும், புதுப்பிக்கப்பட்ட காலாவதித் தேதி இருந்தால் மற்றும் தரக் கட்டுப்பாட்டில் தேர்ச்சி பெற்றால் நீங்கள் அந்த பரிசோதனைக் கருவியைப் பயன்படுத்தலாம்.

கருத்தில் கொள்ளவேண்டியவை: காலாவதியான பரிசோதனைக் கருவிகள் உள்ளமைக்கப்பட்ட தரக் கட்டுப்பாட்டு சோதனையில் தேர்ச்சி பெறும் பட்சத்தில், அவற்றை நீங்கள் பயன்படுத்தலாம்.

## காலாவதியான COVID-19 பரிசோதனைக் கருவிகள் சரியான முடிவுகளைத் தரும் என்பதை நான் எவ்வாறு அறிந்துகொள்வது?

உங்கள் COVID-19 பரிசோதனைக் கருவியானது, “தரக் கட்டுப்பாடு” என்றும் அழைக்கப்படும் பரிசோதனை நம்பகத்தன்மையுடன் செயல்படுகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள, நீங்கள் எடுக்க வேண்டிய படிகள் பரிசோதனைக் கருவியின் வழிமுறைகளுடன் இணைந்து வரும். பரிசோதனைக் கருவிகளின் வழிமுறைகள் தாளில் உள்ள பரிசோதனை முடிவு பிரிவில் தரக் கட்டுப்பாட்டு செயல்முறையைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ளலாம். வீட்டுப் பரிசோதனைக் கருவிகள் பலவற்றின் தரக் கட்டுப்பாட்டுச் செயல்முறையானது, மாதிரியை கருவியில் சேர்க்கும்போது, பரிசோதனைக் கார்ட்ரிட்ஜில் அச்சிடப்பட்ட "C" க்கு அடுத்துள்ள கோடு காண்பிக்கப்படுவதின் மூலம் உறுதி செய்யப்படுவதாகும். தரக் கட்டுப்பாட்டு செயல்முறை தோல்வியுற்றால், நீங்கள் பரிசோதனைக் கருவியை அப்புறப்படுத்த வேண்டும்.

## ஒரு பரிசோதனைக் கருவி எவ்வாறு தேக்க ஆயுள் நீட்டிப்பை பெறுகிறது?

COVID-19 பரிசோதனைக் கருவிகளின் உற்பத்தியாளர்கள், பரிசோதனைக் கருவியை எவ்வளவு காலம் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டும். நீட்டிக்கப்பட்ட காலாவதி தேதிகளை அங்கீகரிக்க, FDA இந்தத் தரவுகளைக் கண்காணிக்கிறது. COVID-19 பரிசோதனைக் கருவிகள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது குறித்த கூடுதல் தரவுகள் இருப்பதால், அவற்றுக்கான தேக்க ஆயுள் நீட்டிப்புகள் இயல்பானவை.

பெட்டியில் உள்ள காலாவதி தேதியின் அடிப்படையில் காலாவதியாகிவிட்டதாகத் தோன்றும் பரிசோதனைக் கருவிகளைப் பயன்படுத்தும் போது இந்தத் தகவல்கள் உங்களுக்கு உறுதியளிக்கும் என்று நம்புகிறோம். உங்கள் COVID-19 பரிசோதனைக் கருவிகள் நன்றாக உள்ளதா என்பதைக் காண என்ன செய்ய வேண்டும் என்பது இப்போது உங்களுக்குத் தெரிந்திருக்கும்: தரக் கட்டுப்பாட்டுக்கான பரிசோதனைக் கருவிகளின் வழிமுறைகளைப் பின்பற்றவும். தரக் கட்டுப்பாட்டில் தேர்ச்சி பெறும் பட்சத்தில், பரிசோதனைக் கருவி பாதுகாப்பானது மற்றும் பயன்படுத்த உகந்தது.

நமது சமூகத்தை பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க நீங்கள் செய்யும் அனைத்திற்கும் நன்றி!

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள்திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

DOH 421-037 February 2023 Tamil